மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கெனவே விதிமுறைகள் இருக்கின்றன. இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையில், திரு. கருப்பண்ண கவுண்டர் என்பவர் 14 ஆண்டுகளாக இதை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார். அதற்குப் பிறகு திரு. பழனிசாமி கவுண்டர் ஆக்கிரமிப்பில் இது இருந்தது. திரு. பழனிசாமி கவுண்டர் பட்டா கொடுக்கவேண்டும் என்று கேட்டார்கள். அதைப் பரிசீலித்த பிறகு பழனிசாமி கவுண்டர் வசதி படைத்தவர் என்றும், பணக்காரராகிய அவருக்குக் கொடுப்பதற்கில்லை என்று கூறப்பட்டுவிட்டது. கருப்பண்ண கவுண்டரும், மற்றும் இரண்டு பேர்களும் விண்ணப்பம் செய்தார்கள். கருப்பண்ண கவுண்டர் பழனிசாமி கவுண்டரிடம் பண்ணையாள். இது பற்றி பரிசீலனை செய்து, பண்ணையாள் பேரில் வாங்கிக் கொண்டு பழனிசாமி கவுண்டர் உரிமை கொண்டாடுவார் என்று அதுவும் மறுக்கப்பட்டது. திரு. பொன்னுராஜ் என்ற அரிசனனுக்கு அந்த நிலத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கருப்பண்ண கவுண்டர் வேறு இடத்தில் கொடுத்தால் போதும் என்று எழுதிக் கொடுத்து விட்டார். பழனிசாமி கவுண்டருக்கும் கிடையாது. கருப்பண்ண கவுண்டருக்கும் கிடையாது. பொன்னுராஜ் என்ற அரிசனனுக்குக் கொடுப்பதற்கு குறிப்பு இருப்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறை நிர்வாகம்

*175 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டின் கூட்டுறவுத்துறையின் நிர்வாகம் புதிய முறையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் யாது ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) ( ) 1—9—1972 முதற்கொண்டு, நிலவள வங்கிகளின் துணைப்பதிவாளர்கள், துணைப்பதிவாளர்கள் (மும்முரவேளாண்மைப் பகுதித்திட்டம்) ஆகியோரது அதிகார வரம்புப் பகுதியை ஒன்றாக இணைத்து வட்டத் துணைப்பதிவாளர்களது அதிகார வரம்புப் பகுதி திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

1974 சனவரி 25]

(ii) தென் ஆர்க்காடு மாவட்டத்திற்காக, கடலூரைத் தலைமையிடமாகக் கொண்டு இணைப்பதிவாளர்களது தனிவட்டாரம் ஒன்று 15—12—1972 முதல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(iii) தவிரவும், கோயம்புத்தூர், தஞ்சாவூர் தணிக்கை வட்டங்கள் மேற்கு கோயம்புத்தூர், கிழக்கு கோயம்புத்தூர் எனவும் மேற்கு தஞ்சாவூர், கிழக்கு தஞ்சாவூர் எனவும் பிரிக்கப் படவேண்டும் என 1973 ஆகஸ்டில் அரசு உத்தரவிட்டுள்ளது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இந்தக் கூட்டுறவு சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டும் என்று பல்வேறு குழுக்கள் அடிக்கடி பரிந்துரை செய்து வருகின்றன. அண்மையில் கூட இண்டர் நேஷனல் கோவாபரேடிவ் அலயன்ஸ் என்ற ஒரு அமைப்புடன் மூன்று நபர் ஆராய்ச்சிக் குழு ஒன்று இங்கு இருக்கிற கூட்டுறவு சட்டத்தையும் கூட்டுறவு அமைப்புகளையும் ஆராய்ந்து விரிவான அறிக்கையை தந்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தைத் திருத்தி அமைக்கவேண்டும் என்ற அறிக்கை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா? ஆமெனில் அந்த அடிப்படையில் கூட்டுறவு சட்டத்தை திருத்துவதற்கான எண்ணம் ஏதாவது அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. அ. பரந்தாமன்: கூட்டுறவுத் துறையில் பல மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று சந்தானம் கமிட்டி ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறது. அந்த அறிக்கையின் அடிப்படையில் சில மாற்றங்கள் செய்யப்பட இருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அதைப்பற்றி மாற்றம் செய்வதற்கான பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாடு கேரள எல்லையிலுள்ள சோதனைச்சாவடி

***176. வினா—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு-கேரள எல்லையில் பணி புரிந்த செக்போஸ்ட் அதிகாரிகளைப்பற்றி புகார்கள் ஏதும் தமிழ்நாடு அரசுக்கு கேரள அரசு சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பு அனுப்பியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?